[2011 பிப்ரவரி 5

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சி, இந்திய கம்யூனிஸ்டு கட்சி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவற்றின் உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை உள்ளடக்கித்தான் அங்கு தற்பொழுது சட்டக் கல்லூரி அமைக்கும் உத்தேசம் அரசுக்கு இல்லையென்று சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி இளமதி சுப்பிரமணியன், அவையில் இல்லை.

வினா வரிசை எண் 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

2—

கல்லூரி

***103716—திரு. பெ. காமராஜ்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, தரகம்பட்டியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, தரகம்பட்டியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ்.

திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதியில் 15–க்கும் மேற்பட்ட மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன. இவற்றில்

2011 பிப்ரவரி 5]

வருடந்தோறும் சுமார் 3,000-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பிளஸ் 2 படித்துவிட்டு வெளியேறுகின்றனர். இவர்கள் உயர்நிலைக் கல்வி பயில வேண்டுமென்றால், கரூர், குளித்தலை, திருச்சி, திண்டுக்கல் போன்ற ஊர்களுக்கு சுமார் 60 கிலோ மீட்டர் தூரத்திற்கு மேல் செல்ல வேண்டும். இவர்கள் அனைவரும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பொருளாதார நிலையில் மிகவும் பின்தங்கியுள்ள, கூலி வேலை செய்யும் ஏழைத் தொழிலாளர்களின் குழந்தைகள் ஆவார்கள். இந்தப் பகுதியில் மாணவர்கள் வெளியூர் சென்று உயர் கல்வி பயில போதிய வசதி இல்லாத நிலைமையில் மேல்நிலைப் பள்ளியோடு தங்களுடைய படிப்பை முடித்துக்கொள்கின்றார்கள். எனவே, கிருஷ்ணராயபுரம் தொகுதி, மாணவர்கள் உயர் கல்வி பெற உதவிடும் வகையில், தரகம்பட்டியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கிட அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர் கடந்த நான்கு ஆண்டுகளில் 8 கல்லூரிகளைத் தொடங்கியுள்ளது. மேட்டூர், வால்பாறை, பெரம்பலூர், ஒரத்தநாடு, மாண்புமிகு உறுப்பினருடைய மாவட்டத்தைச் சேர்ந்த குளித்தலை மற்றும் சுரண்டை, லால்குடி, பெண்ணாகரம் ஆகிய எட்டு இடங்களிலும், மத்திய அரசின் அனுமதியோடு, உதவியோடு 27 மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்த 27 மாவட்டங்களிலும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதில் முதற்கட்டமாக 2010-2011 ஆம் ஆண்டில் நான்கு மாவட்டங்களில், புதுக்கோட்டையில் அறந்தாங்கி, தேனியில் கோட்டூர், திருவண்ணாமலையில் தென்னாங்கூர், விழுப்புரத்தில் திருக்கோயிலூர் ஆகிய நான்கு இடங்களிலும், இது தவிர, 2011-2012 ஆம் கல்வி ஆண்டில் பின்வரும் எட்டு மாவட்டங்களிலும் புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்படும் என ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டுள்ளது. காஞ்சிபுரத்தில் நெம்மேலி, தூத்துக்குடியில் நாகலாபுரம், தருமபுரியில் அரூர், விழுப்புரத்தில் கள்ளக்குறிச்சி, விருதுநகரில் திருச்சுழி, நாகையில் வேதாரண்யம், வேலூரில் திருப்பத்தூர், திருவாரூரில் திருத்துறைப்பூண்டி, ஆக, இந்த

[2011 பிப்ரவரி 5

நான்கு ஆண்டுகளில் கிட்டத்தட்ட 18 கல்லூரிகளைத் தொடங்கியிருக்கிற ஒரே அரசு கலைஞருடைய அரசு என்பதை மறுக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மாவட்டத்திலே, குளித்தலையிலேயும் கல்லூரி தொடங்கப்பட்டுள்ளது. வருங்காலங்களில் அவருடைய தொகுதியில் தேவைப்படுமானால், அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ்.

திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மற்றும் குளித்தலை பகுதியில் அமைந்துள்ள அரசு கலைக் கல்லூரிகளில் அந்தந்தப் பகுதிகளில் வசிக்கும் மாணவர்கள் படிக்கவே இடங்கள் போதுமானவையாக இல்லை. இந்த நிலைமையில், உயர் கல்வியைப் பொறுத்தவரை, தனியார் கல்லூரிகள் இருந்தாலும் அவற்றில் கல்விக் கட்டணம் செலுத்த முடியாத நிலைமை, தூரம் போன்றவற்றைக் கணக்கில் எடுக்கும்பொழுது, கிருஷ்ணராயபுரம் தொகுதியில் கல்வி பயிலும் எங்கள் பகுதி மாணவர்களுக்கு உயர் கல்வி என்பது எட்டாக் கனியாகவே உள்ளது என்பதை மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர், பொற்கால ஆட்சியின் தலைவர் கலைஞர் அவர்கள் 1957 ஆம் ஆண்டு தேர்தலில் குளித்தலை தொகுதியில் வெற்றி பெற்றார்கள். அப்போதைய குளித்தலை தொகுதியின் ஒரு பகுதிதான் இன்றைய கிருஷ்ணராயபுரம் தொகுதி என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்து, தலைப்பிள்ளையான குளித்தலைக்கு கலைக் கல்லூரி தந்த தலைவர் அவர்கள், கடைசிப் பிள்ளையான கிருஷ்ணராயபுரம் தொகுதிக்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தந்திட ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டத்திலே மொத்தமாக நான்கு தொகுதிகள் மட்டுமே உள்ளன. ஆனால், அங்கு இரண்டு அரசு கலைக் கல்லூரிகளும், ஐந்து தனியார் கல்லூரிகளும் ஆகமொத்தம்

2011 பிப்ரவரி 5]

ஏழு கல்லூரிகள் செயல்படுகின்றன. இதைவிடப் பின்தங்கிய நிலையிலே பல மாவட்டங்கள் இருக்கின்ற காரணத்தால்தான், மத்திய அரசுகூட பின்தங்கிய மாவட்டங்களுக்கு உடனடியாக கல்லூரிகள் தர வேண்டுமென்று 27 மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்து கல்லூரிகளைக் கொடுப்பதற்கான அனுமதியை அளித்துள்ளது. ஆக, அந்த அடிப்படையிலே வருங்காலங்களில் தேவையை உணர்ந்து முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும்.

முற்பகல் 9–40

3. அறிவிப்புகள்

(அ) முக்கிய பிரமுகர்கள் இருக்கையிலிருந்து பேரவை நடவடிக்கைகளைக் கண்ணுறும் குஜராத் சட்டப் பேரவைக் குழுவினருக்கு வரவேற்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. குஜராத் சட்டப் பேரவையின் ஆதி திராவிடர் நலக் குழுவின் தலைவர் திரு. காந்திலால் ஆர். லாகும், உறுப்பினர்கள் திருமதி பானுபென் எம். பாபரியா, திருமதி ஜசோதாபென் சி. பார்மர், திரு. சந்துபாய் எம். தாபி ஆகியோர் பேரவை நடவடிக்கைகளைப் பார்வையிட வந்துள்ளார்கள். அவர்களைப் பேரவையின் சார்பில் வரவேற்கிறேன். (மேஜையைத் தட்டும் ஒலி)

Thiru Kantilal R. Lakum, Chairman of the Committee on Welfare of Scheduled Castes, Gujarat Legislative Assembly and Members Tmt. Bhanuben M. Babariya, Tmt. Jashodaben C. Parmar,. Thiru Chandubhai M. Dabhi are now witnessing the proceedings of the House. On behalf of the House, I welcome them. (Thumping of desks)

1. வினாக்கள்–விடைகள்–தொடர்ச்சி

உடுக்குறியிட்ட வினாக்கள்–தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 3, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.